10/=

பக்கங்கள் 06

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 81 புதன்கிழமை ஒகஸ்ட் 02 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48



## வாள்வெட்டு: அறிக்கை அமைச்சரவையில்

கொக்குவிலில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரண்டு பொலிஸார் மீது நடத்தப்பட்ட வாள்வெட்டு தாக்குதல் குறித்த சிறப்பு விசாரணை அறிக்கை நேற்று அமைச் சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள் ளது. கடந்த ஞாயிற் றுக்கிழமை மதியம் இரண்டு பொலி ஸார் இனந்தெரி

06



# முற்றுகைக்குள் குடாநாடு

## 1000 அதிரடிப்படை குவிப்பு

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வன்முறைகளைக் கட்டுப்பாட்டில் கொண்டு வரும் பொறுப்பு சிறப்பு அதிரடிப்படையினரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக, 1000 இற்கும் அதிகமான சிறிப்பு அதிரடிப்படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர். சிறப்பு அதிரடிப்படையினர் குழுக்களாக ரோந்து, உந்துருளி ரோந்து,

06

## முன்னாள் போராளிகள் மீது அவதூறு வேண்டாம்



புனர்வாழ்வு பெற்ற ஏறத்தாழ பன்னீரா யிரம் முன்னாள் விடுதலைப் புலிப் போராளி களில் விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலரின் செயற்பாட்டை வைத்துக் கொண்டு ஒட்டுமொத்த முன்னாள் போராளிகளுக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் அரச தரப்பிலிருந்து கருத்துக்கள் வெளிவந்துள் ளமை கண்டிக்கத்தக்க விடயமாகும் என வட மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசா குறிப்பிட்டுள்ளார். ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த தனது அறிக்கையில்,

"யாழ் நகரில் அண்மைக்காலமாக அதி கரித்து வரும் இளைஞர்களின் வன்முறைச் செயற்பாடுகளுக்கு வட மாகாண சபையும் பொறுப்புக் கூற வேண்டியுள்ளது.

"ஏறத்தாழ ஏழு இலட்சம் மக்கள்

06

## வெட்கம் இல்லாத ரவி பதவி துறக்கவேண்டும்



மகிந்த ராஜபக்சவினால் ஏற்படுத்தப் பட்ட கடனை அடைப்பதாகக் கூறிக் கொள்ளும் இவர்கள் பெரும் கொள்ளை யடிப்பில் ஈடுபட்டுவருகின்றனர் எனக் குறிப்பிட்டுள்ள நாடாளுமன்ற உறுப் பினர் பந்துல குணவர்தன பிரதான கொள்ளைக்காரரான அமைச்சர் ரவி கருணாநாயக்க உடனடியாக தனது அமைச்சுப் பதவியில் இருந்து விலகவேண்டும் என்று வலியுறுத்தி யுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றில் உரை யாற்றிய அவர், "வரலாற்றில் அதிக மான கடன் பெற்றுக்கொண்ட காலப்பகுதி 2001 தொடக்கம் 2004 வரையிலான காலப்பகுதியே.

அன்று பிரதமராக ரணில் விக்கிரம

06

## மன்னிக்க வேண்டுகிறேன்



மத்திய வங்கியின் திறைசேரி பிணை முறிப்பத்திர விவகாரம் சம்பந்தமாக சாட்சியமளிப்பதற்காக வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையானார்.

கடமைகளின் நிமித்தம் இரண்டு முறை ஆணைக் குழுவில் ஆஜராக முடி யாது என அறிவித்திருந்த அமைச்சர் இன்றைய தினம் ஆஜராவதாக அறிவித்திருந்தார்.

இந்த நிலையில், அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆணைக்குழுவில் இன்று முற்பகல் 10.30க்கு சாட்சிய மளித்தார்.

06

## வித்யா கொலை வழக்கு நிசாந்தவிடம் விசாரணை

மாணவி வித்யா கொலை வழக்கு விசா ரணை ட்ரயல் அட்பார் முறையில் இன்று நடை பெற்றது.

கடந்த விசாரணை அமர்வின்போது சாட்சி யமளித்த விசாரணைப் பொறுப்பதிகாரி ஐ.பி. நிசாந்த டி சில்வா இன் றும் தொடர்ந்து சாட்சி யளித்தார்.

அவர் தனது சாட்சி யத்தில் " ஆறாவது சந் தேக நபரிடம் பெறப் பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் அவரது வீட்டின் மேற் கூரைப்பகுதி யில் மறைத்து வைக்கப் பட்டிருந்த மூக்குக் கண் ணாடி ஒன்றினை மீட் டோம். சம்பவ தினத்தை அண்மித்த நாட்களில் நான்கு தொலைபேசி கோபுரங்கள் ஊடாக மேற் கொள்ளப்பட்ட தொலை பேசி அழைப்புக்கள் குறித்து தகவல்களைப் பெற்றுக் கொண்டோம்.

அதனடிப்படையில் 10 பேருடைய அழைப்புக்கள் குறித்து ஆராய்ந்து நட ராசா புவனேஸ்வரன் சம்ப வப் பிரதேசத்தில் இருந் ததை உறுதிப்படுத்தி அவரி டம் விசாரணைகளை மேற் கொண்டோம். பின்னர் ஏனையவர்களைக் கைது செய்தோம். அவர்க ளிடமிருந்து

06

## சமுர்த்திப் பயனாளிகள் போராட்டம்


காரைநகரில் ...


பருத்தித்துறையில்...

யாழ். குடாநாட்டில் பிரதேச செயலகங் களின்முன் சமுர்த்திப் பயனாளிகள் போராட் டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

மூன்று மாதத்துக்கு முன்னர் இடம் பெற்ற சமுர்த்தி மீளாய்வு நடைபெற்றி ருந்தது. அதனடிப்படையில் பலரது சமுர்த்தி நிவாரணம் வெட்டப்பட்டுள் ளது. இந்நிலையில் கடந்த 10 வருடங்க ளாக சமுர்த்தி நிவாரணம் பெற்று வந்த நாம் வறுமையில் உள்ள நிலையில் தமது நிவாரணம் வெட்டப்பட்டுள்ளதாக அவர் கள் குறிப்பிட்டுள்ளனர்.

மீளவும் தமக்கு சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படவேண்டும் என அவர்கள் கோரிக்கையை முன்வைத்து போராட்டங் களில் ஈடுபட்டுவருகின்றனர். அதன் தொடர்ச் சியாக இன்று பருத்தித்துறைப் பிரதேச செய லகத்துக்கு முன்பாவும், காரைநகர் பிரதேச செயலகத்துக்கு முன்பாகவும் மக்கள் ஒன்று கூடி போராட்டங்களில் ஈடுபட்டனர்.

பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்ட மக் களுடன் பிரதேச செயலர் ஆ. சிறி கலந் துரையாடலில் ஈடுபட்டார்.

இதேவேளை காரைநகரில் போராட்டத் தில் ஈடுபட்ட மக்களுடன் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டார். (எ)

# பட்டதாரிகள் வழக்கு நவம்பருக்கு ஒத்திவைப்பு

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவர் மற்றும் அகில இலங்கை ஒன்றிணைந்த வேலையற்ற பட்டதாரிகள் சங்க இணைப்பாளர் உட்பட நால்வர் மீது, மட்டக்களப்பு பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, நவம்பர் மாதம் 6ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்ட வேலையற்ற பட்டதாரிகள் பொதுமக்களின் அமைதிக்கும் சமாதானத்துக்கும் பங்கம் ஏற்படுத்தும் வகையில் நடந்துகொள்ள முற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில், மார்ச் மாதம் 7ஆம் திகதி இவ்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு, நீதிபதி எம். கணேசராஜா முன்னிலையில், இன்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்க தலைவர் ரி.கிஷாந்த், அகில இலங்கை ஒன்றிணைந்த வேலையற்ற பட்டதாரிகள் சங்க இணைப்பாளர் தன்னான ஞானரத்ன தேரர் உட்பட நான்கு பேரும் நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர். (உ)

# யானை தாக்கி விவசாயி பலி

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அலிக்கம்பை வயல் பிரதேசத்தில் யானை தாக்கியத்தில் காவலரணில் உறக்கத்திலிருந்த விவசாயி ஒருவர், இன்று அதிகாலை உயிரிழந்துள்ளாரென, அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்துக்குட்பட்ட கோளாவில் - 03 பிரதேசத்தைச் சேர்ந்த இரு பெண் பிள்ளைகளின் தந்தையான வைரமுத்து நடராசா (63 வயது) என்பவரே உயிரிழந்தவராவார்.

நள்ளிரவு 12 மணியளவில் தாக்குதலுக்கு உள்ளான அவரை அதிகாலை 3 மணியளவில், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் உறவினர்கள் சேர்த்திருந்த போதிலும், சிகிச்சை பலனின்றி அதிகாலை 5 மணியளவில் அவர் உயிரிழந்தார் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை குறித்த பிரதேசத்தில் நேற்று இறந்த யானையின் உடலொன்று கண்டுபிடிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இன்று, இவ்விவசாயி கொல்லப்பட்டுள்ளார். (எ)

# கட்டுநாயக்காவில் வெளிநாட்டு பிரஜை மரணம்

வெளிநாடொன்றிலிருந்து இலங்கைக்கு வந்த நபர் ஒருவர், கட்டுநாயக்க விமான நிலையத்தில் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இன்று காலை 6 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இந்த நபர் உயிரிழந்துள்ளார். தெல்தெனிய பிரதேசத்தை சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

சவுதி அரேபியாவில் இருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் UL-282 என்ற விமானத்தில் குறித்த நபர் இன்று அதிகாலை 4.20 மணியளவில் இலங்கைக்கு வருகைத்தந்துள்ளார்.

எனினும் குறித்த நபரின் மரணத்துக்கான காரணம் இன்னமும் வெளியாகவில்லை. சம்பவம் தொடர்பில் கட்டுநாயக்க பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (உ)

# உயர்தரப் பரீட்சை கருத்தரங்குகளுக்கு தடை

இந்த ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப்பரீட்சை சார்ந்த வகுப்புகள், விரிவுரைகள், கருத்தரங்குகள் இன்று நள்ளிரவுடன் முடிவுக்கு கொண்டுவரப்படவேண்டும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சைகள் தொடர்பாக அச்சிடப்பட்ட ஆவணங்கள் விநியோகம், சுவரொட்டிகள், பதாகைகள், துண்டுப் பிரசுரங்கள், அச்சு ஊடகங்களின் வெளியீடுகள் தொடர்பானவற்றுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த விதிமுறைகளுக்கு எதிராகச் செயற்படும் நிறுவனம் அல்லது நபர் தொடர்பில் முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் எனப் பொலிஸாருக்குப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில், பொலிஸ் நிலையத்தின் அவசர இலக்கம் 119, பரீட்சைகள் திணைக்களத்தின் விரைவு தொலைப்பேசி இலக்கம் 1911 அல்லது 0112 784 208 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கும் முறைப்பாட்டை முன்வைக்க முடியுமென அத்திணைக்களம் அறிவித்துள்ளது. (உ)


மாதாந்தம் ஒரு இலட்சம் வரை சம்பாதிக்கலாம்

விளம்பரத் துறையில் அனுபவம் / ஆர்வம் உள்ளவரா நீங்கள்? அப்படியாயின் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

முழு நேரமாகவோ / பகுதி நேரமாகவோ உங்கள் வசதிக்கேற்ப பணி புரியலாம்

தொடர்புகளுக்கு : 021 300 4848


## ஜனாதிபதி-பிரதமர்

# நினைத்தால் முடியும்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் நினைத்தால் 13 ஆவது திருத்த சட்டத்தின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் வழங்க முடியும்.

பரிந்துரைக்கப்பட்டுள்ள அதிகாரங்களை அடுத்த செக்கனில் கூட அவர்களால் வழங்க முடியும் என கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார். கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கல்முனை உவெஸ்லி கல்லூரியில் நேற்று நடைபெற்ற கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வின் மாலை அமர்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய அவர்



"இந்த நாட்டில் கடந்த அரை நூற்றாண்டு காலமாக சிறுபான்மை சமூகத்தினர் நசுக்கப்பட்டும் அவர்களது உரிமைகள் மறுக்கப்பட்டும் வருகின்றன. இதனால் நாட்டின் சமாதான சூழல் சீர்குலைந்து போயுள்ளது. எந்தவொரு இனமும் நிம்மதியாக வாழ முடியாத துர்ப்பாக்கியம் ஏற்பட்டிருக்கிறது. நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும் பொருட்டு, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக கடந்த காலங்களில் எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்துள்ளன. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பேச்சு வார்த்தைகள் தான் முன்னெடுக்கப்பட்டுள்ளனவே தவிர சிறுபான்மையினருக்கு தீர்வுகள் கிடைக்கவில்லை" - என்றார். (உ)

# கொள்ளைச் சந்தேகநபர் ஒருவர் கைது



பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஒருவர் கொகுவல பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கிருலப்பனை பகுதியைச் சேர்ந்த 42 வயதான குறித்த சந்தேகநபர் மிரிஹான விஷேட குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரால் வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களில் இருந்து சுமார் 15 இலட்சம் ரூபா வரையான பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது. அவரைக் கல்கிசை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (உ)

# உவர் நீர் தடுப்பணை அமைக்க கோரிக்கை

சாவகச்சேரி கோவிற்குடியிருப்பு பிரதேசத்தில் உவர்நீர் தடுப்பு அணை அமைக்குமாறு பொதுமக்களால் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

சாவகச்சேரிப் பிரதேச செயலகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து அவ்விடயம் தென்மராட்சி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் நேற்று கலந்துரையாடப்பட்டது.

கோவிற்குடியிருப்புப் பிரதேசத்தில் மகிழங்கேணிப் பகுதியில் கடற்கரையை மிகவும் அண்டிய பகுதியில் குடிமனைகள் காணப்படுவதால் இந்த உவர்நீர் தடுப்பு அணை அவசியம் தேவைப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் குறித்த இடத்தில் வீட்டுத் திட்டங்கள் வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

# இலங்கையரை நாடு திரும்ப அழைப்பு

சுவிட்சர்லாந்தில் புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களை நாடு திரும்புமாறு, மீள்குடியேற்றத் துறை அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் அழைப்பு விடுத்துள்ளார்.

கொழும்பில் உள்ள சுவிட்ஸர்லாந்துத் தூதரகத்தில் நடைபெற்ற சுவிஸ் தேசியதின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதைத் தெரிவித்தார். (உ)

# இறுதியில் அப்பாக்குட்டி அணி



பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கழக வீரர்களுக்கு இடையிலான உள்ளக கபடித் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் அப்பாக்குட்டி வாரியர்ஸ் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இந்தப் போட்டியில் அப்பாக்குட்டி வாரியோர்ஸ் அணியை எதிர்த்து பெரியம்மான் அணி விளையாடியது.

இடைவேளையின்போது 21:18 என்ற புள்ளிக்கணக்கில் பெரியம்மான் அணி முன்னிலை பெற்றிருந்தது. எனினும், இடைவேளையின் பின்னர் ஆதிக்கம் செலுத்திய அப்பாக்குட்டி அணி 57:43 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக அப்பாக்குட்டி வாரியோர்ஸ் அணியின் தலைவர் பிரகாஸ்பதி தெரிவுசெய்யப்பட்டார். (ஐ)




# திடீரென வெடித்த விமானத்தின் ரயர்

டுபாயிலிருந்து மும்பைக்கு வந்த விமானத்தின் ரயர் திடீரென வெடித்ததால் பயணிகள் பீதியடைந்த சம்பவம் இந்தியாவின் மும்பையில் இடம்பெற்றுள்ளது.
அபுதாபியிலிருந்து எதிஹாத் ஈ.வை. 204 என்ற விமானம் 196 பயணிகளுடன் மும்பைக்கு வந்தது. இந்த விமானம், மும்பை சத்ரபதி சிவாஜி விமான நிலையத்தில் தரையிறங்கியபோது, எதிர்பாராதவிதமாக அதன் ரயர் திடீரெனப் பெரும் சத்தத்துடன் வெடித்தது. உடனடியாகச் சாதூரியமாகச் செயற்பட்ட விமானி விமானத்தைச் சரியான முறையில் கையாண்டு அதனை நிறுத்தினார். இதனால், பெரும் அனர்த்தம் தவிர்க்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (இ)

# எடப்பாடியிடம்தான் தலைமை




“அதிமுகவின் கட்சித் தலைமை முதல்வர் எடப்பாடி பழனிச்சாமியிடமே உள்ளது. அவர் கட்சியையும், ஆட்சியையும் சிறப்பாக வழிநடத்துகிறார் ”என்று நிதியமைச்சர் டி.ஜெயக்குமார் கூறியுள்ளார்.
முதல்வர் கே.பழனிச்சாமி தலைமையில் அதிமுக தலைமை அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை மாலை ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.
இதில் ஜெயக்குமார், திண்டுக்கல் சீனிவாசன் உள்ளிட்ட மூத்த அமைச்சர்கள் பங்கேற்றனர்.
பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் ஜெயக்குமார் கூறுகையில், “எம்ஜிஆர் நூற்றாண்டு விழாவை மற்ற மாவட்டங்களில் சிறப்பாக நடத்துவதற்கான ஆலோசனைகளை முதல்வர் வழங்கினார்.
அணிகள் இணைப்புக் குறித்த பேச்சுக்கான கதவுகள் மூடப்படவில்லை, விரைவில் நல்ல முடிவு எட்டப்படும் என்ற நம்பிக்கையில் உள்ளோம். பல்வேறு மட்டங்களில் பேச்சு நடந்து கொண்டு தான் இருக்கிறது. முடிவு நிச்சயம் எட்டப்படும். முடிவு எட்டப்படும் போது தெரிவிக்கப்படும்.
ஒகஸ்ட் 5 முதல் தினகரன் கட்சிப் பணியில் ஈடுபடப் போவதாக அறிவித்திருப்பது குறித்துக் கவலையில்லை. எம்ஜிஆர் ஆரம்பித்த இந்த இயக்கத்தை எஃகுக் கோட்டையாக ஜெயலலிதா உருவாக்கினார். அந்த எஃகுக் கோட்டை தற்போது முதல்வர் பழனிசாமி தலைமையில் இயங்கி வருகிறது. அவரின் வழிகாட்டலில் கட்சியும், ஆட்சியும் சென்று கொண்டிருக்கிறது” என்றார். (இ)

# மசூதியில் குண்டுவெடிப்பு: 20 பேர் உடல் சிதறிச் சாவு

ஆப்கானிஸ்தானில் மசூதி ஒன்றில் நடத்தப்பட்ட குண்டுவெடிப்பில் 20 க்கும் அதிகமானோர் உடல் சிதறிப் பலியாகினர்.
மேற்கு ஹீரட்டில் சிறுபான்மையினரான ஷியா பிரிவின் ஜவாடியா மசூதியிலேயே இந்தத்தாக்குதல் சம்பவம் நடத்தப்பட்டுள்ளது.
மக்கள் மசூதிக்குள் வழிபட்டுக்கொண்டிருந்த போது இந்தக் குண்டு வெடிப்பு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதலில் சிக்கி உயிரிழந்ததாக இதுவரை 20 பேரின் உடல்கள் ஹீரட் நகர மருத்துவமனைக்கு வந்துள்ளதாக மருத்துவர் தெரிவித்துள்ளார்.
ஆப்கானிஸ்தானில் சிறுபான்மையினரான ஷியா பிரிவைச் சேர்ந்தவர்களை, நாட்டின் கிழக்கில் செயற்படும் ஐ.எஸ் அமைப்புடன் இணைப்பில் உள்ள குழு தொடர்ந்து அச்சுறுத்தி வருகின்றது.
ஆயினும் ஹீரட், ஜவாடியா மசூதி மீது நடத்தப்பட்ட



தாக்குதலுக்கு உடனடியாக எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. (இ)

# ஓர் எழுத்தின் விலை 15 ஆயிரம் டொலர்



பழங்காலச் சீன மொழியை வாசிக்கத் தெரிந்தவர்களுக்கு அங்குள்ள அருங்காட்சியகம் ஒன்று , ஒவ்வொரு எழுத்துக்கும் 15,000 டொலர் வெகுமதி அளிக்க முன்வந்துள்ளது.
சீனாவின் தேசிய அருங்காட்சியத்தில் உள்ள ஒரு சுவடி, 3000 ஆண்டுகள் பழமையானது எனவும் ஷாங் வம்ச காலத்தில் எழுதப்பட்டது எனவும் கூறப்படுகிறது. அது மட்டுமின்றி அந்தக் குறிப்புகள் ஆமைகளின் ஓடுகளிலும் மாடுகளின் தோல்பட்டைகளிலும் எழுதப்பட்டுள்ளன.
குறிப்பிட்ட சுவடியில் எழுதப்பட்டுள்ள 5000 எழுத்துக்களில் பாதி அளவுக்கு மட்டுமே வல்லுநர்களால் வாசித்து அதன் பொருளை இதுவரை விளக்க முடிந்துள்ளது.
மேலும் வாசிக்கப்படாமல் 3000 க்கும் மேற்பட்ட எழுத்துகள் உள்ளதாகவும், பல குறிப்புகள் சீனாவில் உள்ள மக்கள் மற்றும் இடங்களின் பெயர்கள் எனவும், ஆனால் காலப்போக்கில் அவை யாவும் மாற்றம் கண்டுள்ளதால் தற்போது இந்தக் குறிப்புகளை வாசித்து பொருள் விளக்குவது கடினமானதாக இருப்பதாகவும் கூறப்படுகின்றது. (இ)




அமெரிக்க புதிய ஜனாதிபதி டிரம்ப்புக்கு கொலை மிரட்டல் விடுத்தும், ஐ.எஸ் தீவிரவாத குழுவின் புதிய தாக்குதல் திட்டத்தை விளக்கும் வகையிலும் ஐ.எஸ் குழுவைச் சேர்ந்த தீவிரவாதி ஒருவன் எச்சரிக்கை வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளான்.
வீடியோவில் தோன்றிய தீவிரவாதி கூறியதாவது, “இத்தாலி மற்றும் துருக்கியில் தீவிரவாதத் தாக்குதல்கள் நடத்தப்படும். பொதுமக்கள் தங்கள் சொந்த வீடுகளில் வைத்துப் படுகொலை செய்யப்படுவார்கள் .இந்தப் புதிய செய்தி டொனால்ட் டிரம்ப்புக்கு, நீங்கள் ரக்கா மற்றும் மொசூல் மீது இலக்கு வைத்திருக்கலாம். ஆனால், நாங்கள் இஸ்தான்புல், ரோமை இலக்காகக் கொண்டிருப்போம்.
அல்லாஹ்வின் அனுமதியோடு நாங்கள், உங்களை உங்கள் சொந்த வீட்டில் வைத்துப் படுகொலை செய்வோம்” என இயந்திரத் துப்பாக்கியோடு நிற்கும் அந்தத் தீவிரவாதி எச்சரிக்கை விடுத்துள்ளான். (இ)

# பெண்ணியச் செயற்பாட்டாளர் சிறையில் இருந்து விடுவிப்பு

சவுதி அரேபியாவில் ஆண் பாதுகாவலர்களின் கட்டுப்பாடுகளுக்கு எதிராக பரப்புரையில் ஈடுபட்டதால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த பெண் செயற்பாட்டாளரான மரியம் அல் ஒட்டைபி விடுவிக்கப்பட்டுள்ளார்.
அவர் கடந்த 100 நாட்களாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.
தனது தந்தையின் வீட்டிலிருந்து தப்பித்து தனித்து வாழ முயற்சி செய்ததாலேயே அவர் தடுப்பு காவலில் வைக்கப்பட்டிருந்தார். பாஸ்போர்ட் பெறுவதற்கு விண்ணப்பிப்பது, வெளிநாடுகளுக்குப் பயணம் செய்வது, திருமணம் செய்து கொள்வது, சிறையிலிருந்து வெளி வருவது உள்ளிட்ட செயல்களுக்கு சவுதிப் பெண்கள் ஆண்களின் அனுமதியைப் பெற வேண்டியது அவசியம் என்ற முறை அந்த நாட்டில் பாரம்பரியமாகப் பின்பற்றப்பட்டு வருகின்றது.
இந்த அடக்குமுறைக்கு எதிராக மரியம் அல் ஒட்டைபி சமூக வலைத்தளங்களில் குரல் கொடுத்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# பொலிஸார் சூடு 3 கைதிகள் பலி

ரஷ்யாவில் பொலிஸாரின் துப்பாக்கியைப் பறித்துக் கொண்டு தப்பிக்க முயன்ற மூன்று கைதிகள் நீதிமன்ற வளாகத்தில் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர்.
ரஷ்யாவில் கொலை மற்றும் கொள்ளை வழக்கில் தொடர்புடைய ஐந்து கைதிகளை ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவில் உள்ள பிராந்திய நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்காகப் பொலிஸார் கொண்டு சென்றனர்.
அப்போது திடீரெனப் பொலிஸாரின் துப்பாக்கியைப் பறித்துக் கொண்டு கைதிகள் தப்பிக்க முயன்றனர். இதனால் தேசிய பாதுகாப்பு அதிகாரிகள் தங்களைப் பாதுகாப்பதற்காகத் திருப்பிச் சுட்டனர். இதில் மூன்று கைதிகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மற்ற இருவரும் படுகாயம் அடைந்தனர். (இ)

# சசிகலாவைச் சிறையில் சந்தித்தார் தினகரன்

பெங்களூர்ச் சிறையில் சசிகலாவை, தினகரன் இன்று சந்தித்துப் பேசினார்.
அ.தி.மு.க.,வை, தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக, இம் மாதம் 5ஆம் திகதியில் இருந்து கட்சித் தலைமை அலுவலகத்துக்குச் செல்ல, தினகரன் முடிவு செய்துள்ளார். அன்று, அனைத்து பிரமுகர்களையும் சென்னைக்கு வரும்படியும் தினகரன் அழைப்பு விடுத்திருந்தார்.
இந்த நிலையில், பெங்களூர்ச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள சசிகலாவை, தினகரன், இன்று சந்தித்து



உள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. அ.தி.மு.க.,வின் இரு அணிகள் இணைவதற்கு விதிக்கப்பட்ட, 60 நாட்கள் கெடு, ஒகஸ்ட் 4 ஆம் திகதியுடன் நிறைவடைகிறது. இதனால், அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து சசிகலாவுடன் தினகரன் விவாதித்திருக்கலாம் எனவும் தெரிகிறது. மேலும் நேற்று அதிமுக தலைமைச் செயலகத்தில் முதல்வர் பழனிச்சாமி தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டம் தொடர்பாகவும் இருவரும் ஆலோசனை நடத்தியுள்ளார்கள் எனவும் ஊகிக்கப்படுகின்றது. (இ)

# இன்றைய ஆட்டங்கள்

திக்கம் மத்திய சன சமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டத் தொடரில் இன்று இரவு இரு ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

இரவு 7 மணிக்கு ஆரம்பமாகும் முதலாவது போட்டியில் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அராலி அண்ணா விளையாட்டுக்கழகம் மோதும்.

பின்னர் 8 மணிக்கு ஆரம்பமாகும் ஆட்டத்தில் உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பொலிகை பாரதி விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

* * * * * * * *

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 62ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரில் இன்று இரவு இரு ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

முதலாவது ஆட்டத்தில் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து புத்தூர் சரஸ்வதி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

பின்னர் நடைபெறும் இரண்டாவது போட்டியில் சிறுப்பிட்டி கலை ஒளி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நீர்வேலி காமாட்சி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ஐ)



# வீழ்ந்தது பொம்மர்ஸ் இறுதியில் விண்மீன்

அமரர் கந்தசாமி ஆறுமுகம் ஞாபகார்த்தமாக கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்திவரும் உதைபந்தாட்டத் தொடரில் நேற்று நடைபெற்ற அரையிறுதியாட்டம் ஒன்றில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது,

நேற்று இரவு நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் மோதியது.

இதன் முதல்பாதியாட்டத்திலேயே விண்மீன் வீரர்களால் உதைக்கப்பட்ட பந்துகள் எதிரணியினரின் கோல்க் கம்பங்களை முத்தமிட்டவண்ணமிருந்தன.

விண்மீன் வீரரான காண்டீபன் முதல் கோலைப் போட, சக வீரரான நிஷாந்தன் அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டார். இதனால் முதல் பாதியாட்டத்தில் 3:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது விண்மீன்.

பிற்பாதியாட்டத்தில் முழுமையாக தடுப்பாட்டத்தை வெளிப்படுத்திய விண்மீன், பொம்மர்ஸ் அணியின் முன்கள வீரர்கள் மேற்கொண்ட முயற்சிகளை முறியடித்தனர்.

ஆட்டத்தின் இறுதியில் 3:0 என்ற கோல் கணக்கில் பொம்மர்ஸ் அணியை வீழ்த்தி இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது பலாலி விண்மீன்.

ஆட்ட நாயகனாக விண்மீனின் பின்கள வீரரான ரதன் தெரிவுசெய்யப்பட்டார்.(ஐ)

# கருணாகரன், நசரத் அணிகள் வெற்றி

திக்கம் மத்திய சன சமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டத் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டங்களில் கருணாகரன் மற்றும் நசரத் கழகங்கள் வெற்றிபெற்றன.

முதலாவது போட்டியில் நெடியகாடு விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கருணாகரன் விளையாட்டுக் கழகம் மோதியது.

இதில் ஆட்டத்தைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த கருணாகரன் விளையாட்டுக்கழகம், 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இரண்டாவதாக நடைபெற்ற ஆட்டத்தில் நசரத் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரணவாய் மத்திய விளையாட்டுக் கழகம் மோதியது.

இந்த ஆட்டத்தில் இரு அணிகளுமே போட்டி போட்டு ஆடின. இதனால் ஆட்டம் 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது. பின்னர் வெற்றியைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட 'பெனால்டி' உதையில் நசரத் விளையாட்டுக் கழகம் 6:5 என்ற கோல் கணக்கில் வென்றது.(ஐ)


# ஈழத்தமிழிச்சிக்கு ரகுமானின் மரியாதை

ஜேர்மனியில் வசித்து வரும் ஈழத் தமிழ் கலைஞரான ஒலிவியா தன பாலசிங்கத்தின் வீணை இசையை ஒஸ்கார் நாயகன் ஏ.ஆர்.ரகுமான் தனது பேஸ்புக் மற்றும் டுவிட்டர் பக்கங்களில் பகிர்ந்துள்ளார்.

ஏ.ஆர். ரகுமான் தனது சமூக வலைத் தளங்களில் இப்படியான இசைக்கருவி இசையை பகிர்ந்திருப்பது இதுவே முதல் முறையாகும்.

ஏ.ஆர். ரகுமான் சமூக வலைத்தளங்களின் ஊடாக தனது 40 மில்லியனுக்கும் மேற்பட்ட அபிமானிகளுக்கு ஈழத் தமிழ் கலைஞர் ஒலிவியாவின் வீணை இசையைத் தெரியப்படுத்தியுள்ளார்.

சமீபத்தில் ஏ.ஆர். ரகுமான் இசையில் வெளிவந்த திரைப்படம் ஒன்றில் அனைவராலும் ரசிக்கப்பட்ட "சரட்டு வண்டில" என்ற பாடலை ஒலிவியா. வீணையில் மீட்டி பதிவேற்றம் செய்திருந்தார்.




அதனை ரசித்த ஏ.ஆர். ரகுமான் தனது ரசிகர்களுடன் இதைப் பகிர்ந்துள்ளார்.

ஜேர்மனில் பிறந்த ஈழத்தமிழரான ஒலிவியா தனபாலசிங்கம், கர்நாடக சங்கீதம், பரத நாட்டியம், வீணை போன்ற வற்றை முறைப்படி கற்றுத்தேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# முறிந்த காதல்?




'பிக்பாஸ்' நிகழ்ச்சி தொடங்கியதிலிருந்தே நடிகை ஓவியா, ஆரவ்வைக் காதலித்து வருகிறார். ஆனால், ஆரவ் அவரைப் பொருட்படுத்தவில்லை. எனினும் ஓவியா விடுவதாக இல்லை. இதுதான் பிக்பாஸில் காட்டப்படும் காதல் காட்சி.

கடந்த சில நாட்களாக ஓவியா செய்யும் செயல்கள் தன்னை வெறுப்பேற்றுவதாக ஆரவ் பிக்பாஸிடம் நேற்று முறையிட்டார்.

படுக்கையில் அருகில் படுத்துக்கொள்வது, முத்தம் கேட்பது என ஓவியா தன்னை தர்மசங்கடத்துக்கு ஆளாக்கிவிடுகிறார் என ஆரவ் குற்றஞ்சாட்டினார். அதைக் கேட்ட 'பிக் பாஸ்', "நீங்களே பேசி சுமூகமாகத் தீர்த்துக்கொள்ளுங்கள்" எனக் கூறிவிட்டார்.

இந்நிலையில் இன்று வரவுள்ள 'பிக் பாஸ்' நிகழ்ச்சிக்காக வெளியிடப்பட்ட டீஸரில், ஓவியா-ஆரவ் இடையே சண்டை வெடித்ததுபோல காட்டப்பட்டுள்ளது.

மேலும் ஓவியா 'கெட் லொஸ்ட்' எனக் கூறிவிட்டு சென்றுவிட்டார். அதனால் அவர்கள் நிரந்தரமாகப் பிரிந்துவிட்டார்களோ என்ற கேள்வி எழுந்துள்ளது. என்ன நடந்தது என்பது இன்று இரவு தெரியவரும். (ஒ)




# விளையாட்டுக் கொலை

ஊக்க மருந்து பயன்பாடு நிறுத்த வேண்டும் இல்லையென்றால் விளையாட்டு மரணமடைந்துவிடும் என உலகின் மின்னல் மனிதன் என வர்ணிக்கப்படும் ஜமைக்காவின் குறுந்தூர ஓட்ட வீரரான உசைன் போல்ட் தெரிவித்துள்ளார்.

எட்டு முறை ஒலிம்பிக் சம்பியனாகச் சாதித்த போல்ட், உலக சம்பியன்ஷிப் போட்டிகளில் கலந்து கொண்டிருக்கிறார். அப்போது செய்தியாளர் ஒருவரிடம் பேசும்போது சமீபத்தில் வெளியாகிய மெலாரென் அறிக்கையில் ரஷ்ய அரசு ஆதரிக்கும் ஊக்க மருந்துப் பயன்பாடு பற்றி குறிப்பிடுகையில்,

"தனிப்பட்ட முறையில் எண்ணும்போது இதை விட அடிமட்டத்துக்குப் போக முடியாது என்றே கருதுகிறேன், ரஷ்யாவின் முறைகேட்டைப் பார்க்கும்போது இதை விட மோசமாக முடியாது.

சமீபகாலமாக வீரர்கள் பலர் இப்படிப் பிடிபடுகிறார்கள். தவறு செய்தால் பிடிபடுவார்கள் என்ற எண்ணம் வந்தால் காலப்போக்கில் விளையாட்டு சிறப்பாகும்.

ஒருபுறம் கடுமையாகப் பணி புரிந்து சிலர் முன்னேறும் போது, வேறு சிலர் அதைப் பின்னோக்கி நகர்த்துவது மகிழ்ச்சியான நிலையில்லை. அது கடுமையான ஒன்று" என்றார். (ஐ)

# அப்ரிடிக்கு உதவிய கோலி

இந்திய அணிக் கிரிக்கெட் அணியின் தலைவரான விராட் கோலி, தான் கையெழுத்திட்ட துடுப்பு மட்டையை நன்கொடையாக பாகிஸ்தான் முன்னாள் அணித்தலைவரான அப்ரிடியின் தொண்டு நிறுவனத்துக்கு வழங்கியுள்ளார்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டி, பரம எதிரிகளுக்கு இடையிலான மோதல் என்று வர்ணிக்கப்படும். மைதானத்துக்குள்ளேயும், வெளியேயும் வீரர்களும் அப்படித்தான் நடந்து கொள்வார்கள். இந்திய ரசிகர்களும், பாகிஸ்தான் ரசிகர்களும் அந்தக் கண்ணோட்டத்தில்தான் போட்டியை ரசிப்பார்கள்.


ஆனால், இந்திய அணி த்தலைவர் விராட் கோலி அதிலிருந்து சற்று மாறுபட்டுக் காணப்படுகிறார். மொகமது ஆமிர் தடைக்காலம் முடிந்து மீண்டும் விளையாட வந்த காலத்தில் அவருக்கு ஆதரவு தெரிவித்தார்.

இருபது-20 உலகக் கிண்ணத் தொடரில் இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டி கொல்கத்தாவில் நடைபெற்றது.

அப்போது அமிருக்கு கோலி துடுப்பு மட்டையைப் பரிசாக அளித்தார். சம்பியன்ஸ்கிண்ண இறுதிப் போட்டியில் தோல்வியடைந்த பின்னரும், பாகிஸ்தான் வீரர்களுடன் விராட் கோலி சகஜமாக பேசிக் கொண்டிருந்தார். அதற்கு மேலாக டோனி, விராட் கோலி பாகிஸ்தான் அணித்தலைவர் சர்பிராஸ் அகமதுவின் மகனுடன் போட்டோ எடுத்துக் கொண்டனர்.

பாகிஸ்தான் அணியின் அதிரடி வீரரும், முன்னாள் தலைவருமான ஷாகித் அப்ரிடி சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றதும், இந்திய அணி அணித்தலைவர் விராட் கோலி, இந்திய வீரர்கள் அனைவரும் கையெழுத்திட்ட தனது ஜேர்சியைப் பரிசாக வழங்கினார்.

தற்போது அப்ரிடி நடத்தும் தொண்டு நிறுவனத்துக்குத் தனது கையெழுத்திட்ட துடுப்பு மட்டையை விராட் கோலி நன்கொடையாக வழங்கியுள்ளார்.



இவரின் இந்தச் செயல் பலராலும் பாராட்டப்பட்டு வருகிறது. (ஒ)



# செயலாளர் நியமனம்

சமூக வலுவூட்டல், நலன் புரி மற்றும் மலையக மரபுரிமைகள் அமைச்சின் செயலாளராக திருமதி டபிள்யு.ஜே.பீ.எஸ்.வீரக்கோன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுற்பகல் ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோ விடமிருந்து அவர் நியமனக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டார். திருமதி டபிள்யு.ஜே.பீ.எஸ். வீரக்கோன், இதற்கு முன்னர் சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய விவகார அமைச்சின்மேலதிக செயலாளராகக் கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

# இன்றைய கருத்தோவியம்




# டெங்கு ஊர்வலம்



'நாங்கள் டெங்கு பற்றி அறிந்து கொள்வோம் ஒழிப்பதில் பங்களிப்போம் இது எங்கள் கடமையும் பொறுப்புமாகும்' எனும் தொனிப் பொருளில் டெங்கு பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது. செங்கலடி மெதடிஸ்த பாலர் பாடசாலை முன்றலில் நேற்று ஆரம்பமான விழிப்புணர்வு ஊர்வலம் செங்கலடி முச்சந்தியை வந்தடைந்தது. (உ)

# இலங்கைக் கொள்கையில் ராஜீவ்காந்தியின் தோல்வி

**பாடக் குறிப்புக்கள் நீக்கம்**



மகாராஸ்டிர மாநில பாடநூல்களில் இடம்பெற்றிருந்த, இலங்கை தொடர்பான கொள்கையில் ராஜீவ் காந்தியின் தோல்வி பற்றிய குறிப்புகளை அகற்ற மாநில அரசு முடிவு செய்துள்ளது. மகாராஷ்டிரா மாநில பாடசாலைகளில் ஒன்பதாம் தர மாணவர்களுக்கான வரலாறு மற்றும் அரசியல் விஞ்ஞான பாடநூலில், முன்னாள் இந்தியப் பிரதமர்கள் இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி ஆகியோரை விமர்சிக்கும் வகையில் குறிப்புகள் இடம்பெற்றிருந்தன. ராஜீவ் காந்தியின் போபர்ஸ் ஊழல் பற்றிய குறிப்புகளும், இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் கொள்கையின் தோல்வி பற்றிய குறிப்புகளும் இதில் இடம்பெற்றிருந்தன. இதற்கு காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி குடும்பத்தினரை பாஜக திட்டமிட்டு கேவலப்படுத்துவதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன.
இந்த நிலையில், இந்தக் குறிப்புகள் பாடநூல்களில் இருந்து நீக்கப்படும் என்று மகாராஷ்டிர மாநில கல்வி அமைச்சர் வினோத் தவ்டே மாநில சட்டமன்ற மேலவையில் நேற்று உறுதியளித்துள்ளார். (உ)

# தனியார் வகுப்புகளுக்கு தடை

ஞாயிறு மற்றும் போயா தினங்களில் மேலதிக தனியார் வகுப்புக்கள் நடத்தப்படுவதை தடுப்பதற்கான புதிய சட்டமூலம் ஒன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. மஹரகமவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ இந்த விடயத்தை தெரிவித்தார். இது குறித்து மேலதிக வகுப்பு நடத்தும் ஆசிரியர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாகவும் அமைச்சர் கூறினார். இந்த புதிய நடைமுறையின் கீழ் மாணவர்கள் சமயம் தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்துவார்கள் என்றும் அமைச்சர் மேலும் நம்பிக்கை வெளியிட்டார். (உ)

# ஐ.நா. ஆணையரின் ஆலோசகர் இலங்கையில்

ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் மூத்த ஆலோசகர் ஒருவர் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகத்தின் மூத்த மனித உரிமைகள் ஆலோசகரான ஜூவான் பெர்னான்டஸ் என்ற அதிகாரியே இலங்கை வந்துள்ளார். ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் நடைமுறைப்படுத்தப் படுகிறதா என்பது குறித்தும், இராணுவ மறுசீரமைப்புத் தொடர்பான பரிந்துரைகளின் நடைமுறைப் படுத்தல்கள் குறித்தும் ஆராய்வதே இவரது பயணத்தின் நோக்கம் என்று கூறப்படுகிறது. இவர் தனது பயணத்தின் ஒரு கட்டமாக நேற்று இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். (உ)

# கௌரவம்



இளைஞர் தலைமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பிரித்தானிய மகாராணியிடம் இருந்து விருது வென்ற இலங்கையர்களான ரகித மாலேவன மற்றும் செனெல் வன்னியாரச்சி ஆகிய இரு இளைஞர்களும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்தனர். ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் இந்த இரு இளைஞர்களும் இலங்கைக்கு பெற்றுத்தந்துள்ள பெருமையைப் பாராட்டிய ஜனாதிபதி, அவர்களது எதிர்காலத்துக்காக தனது ஆசிகளை தெரிவித்தார். பொதுநலவாய நாடுகளில் உள்ள மக்களிடம் நிலையான மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் தனிப்பட்ட திறன்களை பொதுமக்களின் வாழ்க்கையை மாற்றுவதற்காக பயன்படுத்தும் இளைஞர் யுவதிகளை அடையாளம் காண்பதற்காக இந்த நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. பொதுநலவாய நாடுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 60 இளைஞர்களுக்கு பிரித்தானிய மகாராணியால் இவ்வாறு இங்கிலாந்து பக்கிங்ஹம் மாளிகையில் விருதுகள் வழங்கப்பட்டன. (உ)

## கடன் சுமையை எதிர்காலச் சந்ததியிடம்

# ஒப்படைக்க மாட்டோம்



தற்போதைய சந்ததியுடன் இந்தக் கடன் சுமையை நிறைவுக்கு கொண்டுவருவது அரசாங்கத்தின் நோக்கமாகும் எனத் தெரிவித்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் கடன் சுமையை அதிகரிக்க அரசாங்கம் எதிர்பார்க்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார். மொறட்டுவ பிறின்ஸ் வேல்ஸ் கல்லூரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள நீச்சல் தடாகத்தை திறந்துவைக்கும் நிகழ்வில் நேற்றுக் கலந்துகொண்டு பிரதமர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார். கல்வித்துறையின் அபிவிருத்திக்கு உதவும் வகையில் சிறந்த பொருளாதாரமொன்றைக் கட்டியெழுப்ப அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகின்றது. எதிர்வரும்2 வருடங்களுக்குள்பாடசாலை மாணவர்களுக்கு ரப்லெட் கணனிகளை வழங்கத் திட்டமிட்டு வருகின்றோம். தொழில்நுட்பத்துறையில் முன்னேறிய ஒரு நாட்டை எதிர்கால சந்ததியிடம் ஒப்படைக்க அரசாங்கம்நடவடிக்கை எடுத்து வருகிறது. போதைப்பொருள் பாவனையை ஒழிப்பதற்கும் பாரிய அளவில் கைத்தொழில்களை ஆரம்பித்து வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (உ)

# பங்குச்சந்தைக்கு ஆஸி. பங்களிப்பு

ஆஸ்திரேலியாவிலிருந்து பங்குச் சந்தைக்கு பெரும்பங்களிப்பு கிடைத்துவருவதாக கொழும்பு பங்குச் சந்தை தெரிவித்துள்ளது. இந்த ஆண்டு முதல் இதுவரையில் அதன் பங்களிப்பு 626.4 மில்லியன் ரூபா என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பு பங்கு சந்தை வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆஸ்திரேலியாவில் நடத்தப்பட்ட பங்குச் சந்தை ஊக்குவிப்பு நிகழ்ச்சியின் பின்னர் இந்த முன்னேற்றம் பதிவாகியிருக்கிறது. (உ)

## நாளை நாளும் கோளும்

03.08.2017 வியாழக்கிழமை ஏவிளம்பி வருடம் ஆடி மாதம் 18ஆம் நாள்

ஏகாதசி மாலை 06.30 வரை | கேட்டை மு.இ. 08.19 வரை | சித்தயோகம் | மரணயோகம்

இராகுகாலம் 01.34-03.04 | சுபநேரம் 07.34-09.04 | எமகண்டம் 06.04-07.34

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இலாபம் | நிறைவு | விருத்தி | வரவு | அன்பு | நன்மை | நலம் | மறதி | உதவி | நட்டம் | பொறுமை | ஆதரவு |

எதிரொலி
Ethiroli

# நீதிபதிகள் எண்ணிக்கை அதிகரிக்க அனுமதி

மேல் நீதிமன்றத்துக்காக தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள நீதிபதிகளின் எண்ணிக்கையினை 75 இலிருந்து 85 வரை அதிகரிக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது. சட்ட வரைஞர் திணைக்களத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட நீதிமன்ற அமைப்பு (திருத்தச்) சட்டமூலத்தினை அரச வர்த்தமானியில் பிரசுரித்தற்குப் பின்னர் நாடாளுமன்ற அனுமதிக்காக சமர்ப்பிப்பதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (எ)

# கைதானார் விஜித தேரர்



ஜாதிக பல சேனா அமைப்பின் செயலாளர் வட்டரக விஜித தேரர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவர் நேற்று மாலை கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஜனாதிபதி செயலகக் காரியாலய பணியாளர்களுக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் கலகம் விளைவிக்கும் வகையில் செயற்பட்டதால் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், உடல் நலக் குறைவு காரணமாக அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (உ)

# அந்த நாள் ஞாபகம்.....!



## 1989.08.02

யாழ்ப்பாணம் , வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவத்தினர் நடத்திய வெறியாட்டத்தில் பெண்கள், குழந்தைகள் உட்பட 63 பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

# கிளிநொச்சியில் இன்று விடைகளோடு வினாத்தாள்

கிளிநொச்சி கல்வி வலயத்தில் இன்று புதன்கிழமை இடம்பெற்ற தரம்-11 க்கான சமயப் பாட பரீட்சை வினாத்தாளுடன் விடைத்தாளும் வழங்கப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி வலயப் பாடசாலைகளில் தற்போது இரண்டாம் தவணைப் பரீட்சைகள் இடம்பெற்று வருகின்றன. இதில் இன்றைய தினம் சைவசமயப் பாடத்துக்கான பரீட்சை இடம்பெற்றுள்ளது.

இதன்போது, மாணவர்களுக்கு வழங்கப்படுவதற்காக வினாத்தாள் பொதி, பாடசாலை பரீட்சை மண்டபத்தில் பிரிக்கப்பட்டு, வினாத்தாள்களுடன் விடைத்தாள்களும் இணைத்து வழங்கப்பட்டன. பின்னர் இந்த விடயம் உடனடியாகக் கண்டுபிடிக்கப்பட்டதால், மாணவர்களிடம் இருந்த விடைத்தாள்கள் மீளப்பெறப்பட்ட பின்னர் பரீட்சை நடைபெற்றது.

இது தொடர்பில் வட மாகாண கல்வி அமைச்சர் க. சர்வேஸ்ரனிடம் வினவிய போது “ கிளிநொச்சி வலயத்தில் மட்டுமே அவ்வாறு நடைபெற்றுள்ளது. எனினும் தற்போது உடனடியாக விடைத்தாள்கள் மீளப்பெறப்பட்டு பரீட்சைகள் நடத்தப்பட்டுள்ளன” என்றார். (ஆ)

# யாழ்.பல்கலைக்கு 8 மாடிக் கட்டடம்

யாழ்.பல்கலைக்கழகத்தில் பொறியியல் தொழில்நுட்பம், உயிரியல் தொகுதி தொழில்நுட்ப பிரிவு மற்றும் மருத்துவ பீடத்துக்கான 8 மாடிகளைக் கொண்ட பயிற்சிக் கட்டடம் ஆகியவற்றை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தங்கள் கோரப்படவுள்ளன. அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டுள்ள நிலையியல் கொள்முதல் குழுவின் சிபார்சின் பேரில் முறையே 424.43 மில்லியன் ரூபா மற்றும் 564.67 மில்லியன் ரூபா தொகைக்கு ஒப்பந்தங்களை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்லவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (எ)

# அதிகரிப்புமில்லை துண்டிப்புமில்லை


வறட்சியான கால நிலையால் மின் கட்டணம் அதிகரிக்கப்படவோ, மின் துண்டிப்பு இடம்பெறவோ மாட்டாது என, மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிடிய தெரிவித்துள்ளார். சிலர் மின்சாரம் துண்டிக்கப்படுமா என்பது குறித்து பேசி வருவதாகவும், அரசு தற்போது மிகவும் சவாலான நிலைக்கு முகம்கொடுத்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கடந்த வருடத்தை விட மின்சாரத்துக்கான கேள்வி தற்போது நூற்றுக்கு 10 வீதம் வரை அதிகரித்துள்ளதாகவும், வறட்சியான காலநிலையுடன் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை மின் உற்பத்தி நிலையங்களாக உள்ள நீர் நிலைகளின் மட்டம் நூற்றுக்கு 36 வீதம் குறைவடைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ள மின்சக்தி அமைச்சர், சில நீர்நிலைகளின் மட்டம் நூற்றுக்கு 20 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் கூறியுள்ளார். (உ)

# சைட்டத்துக்கு எதிர்ப்பு

## கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சியில் சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்பு தெரிவித்து கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இன்று காலை இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் அரச மருத்துவ சங்கம், யாழ் மருத்துவ பீடம், கிளிநொச்சி நோயாளர் நலன்புரிச் சங்கம், ஏனைய மருத்துவ அதிகாரிகள் வைத்தியர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டார்கள். இது தொடர்பில் அரச மருத்துவ சங்கத்தின் கிளிநொச்சி மாவட்ட செயலாளர் வைத்தியர் சுதர்சன் தெரிவிக்கையில் “இன்று ஓகஸ்ட் இரண்டாம் திகதி நாடு பூராகவும் சட்டபூர்வமற்ற மருத்துவ கல்லூரியான சைட்டத்தினை மூடுவதற்காக போராட்டம் நடத்திக் கொண்டிருகின்றோம். அந்த வகையில் இன்றைய தினத்தை தேசிய தினமாக பிரகடனப்படுத்தி போராட்டத்தை நடத்தி வருகின்றோம்.” என்றார். (உ)

# மன்னாரைத் தரமுயர்த்த இன்று கையெழுத்து



பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ‘மன்னாரின் எழுச்சி அதுவே எங்களின் முயற்சி’ எனும் கருப்பொருளில் கையெழுத்து வேட்டை இன்று நடைபெற்றது.

மன்னார் மாவட்ட முகப்பில் வரவேற்பு கோபுரம் மற்றும் மணிக்கூண்டுக் கோபுரம் அமைத்தல், மின் சமிக்ஞை விளக்குகள் பொருத்துதல், மன்னார் பொது நூலகத்தை சிறப்பாக உருவாக்குதல், கிராமப்புறங்களில் உள்ள நூலகங்களை தரமுயர்த்தல், மன்னாரில் பல்கலைக்கழகம் ஒன்றை உருவாக்குதல் என்பன போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே இந்தக் கையெழுத்து வேட்டை நடைபெற்றது.

மன்னார் மாவட்ட தமிழமுது நண்பர்கள் வட்டம் இதனை ஏற்பாடு செய்திருந்தது. மக்கள்,சமூக ஆர்வலர்கள்,பொது அமைப்புக்களின்பிரதி நிதிகள்என்போர் ஆர்வத்தோடு பங்கெடுத்து தம் கையொப்பங்களைப் பதிவு செய்தனர். (இ)

## தொடர்ச்சிகள்

### வித்யா கொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீட்கப்பட்ட கைபேசிகள், ரப், டல்டொப் ஆகியன பகுப்பாய்வுக்கு அனுப்பி வைத்திருந்தோம். அவை குறித்த அறிக்கைகள் இதுவரை கிடைக்கவில்லை“ - என்றார்.

### வெட்கம் இல்லாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கவே இருந்தார். அவர் அரச நிதி முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் அதிகூடிய கடன்தொகையாக 100 இற்கு 80 வீதம் வரை பெற்றுக்கொள்ளும் வகையில் மறுசீரமைப்புகளை மேற்கொண்டு கடன்களைப் பெற்றுக்கொண்டார். அதேபோல் கடந்த இரண்டு வருடகாலமாக நிதி அமைச்சராக இருந்த ரவி கருணாநாயக்க இதனை 83 சதவீதம் வரை கொண்டு சென்றுள்ளார். ரவி கருணாநாயக்கவுக்கு வெட்கம், பயம் ஏதும் இல்லாமையாலேயே அனைத்தையும் மேற்கொண்டுவிட்டு ஒன்றும் செய்யாதவர் போன்று செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார். பெரும் ஊழலில் ஈடுபட்டுள்ள அவர் உடனடியாக தனது பதவியில் இருந்து விலகவேண்டும் - என்றார்.

### முற்றுகைக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சோதனை, போன்றவற்றில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் இரவில் மாத்திரம் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்ததாகவும், அண்மையில் குடாநாட்டில் இடம்பெற்ற சில சம்பவங்களை அடுத்து, நாள் முழுவதிலும் சிறப்பு அதிரடிப்படையினர் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டு வருவதாகவும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். சிறப்பு அதிரடிப்படைக்கு மேலதிகமாக சிறப்பு பொலிஸ் குழுக்களும் யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. வன்முறைகள் தொடர்பான தகவல்களைத் திரட்டுவதற்காக, புலனாய்வுப் பிரிவுகளை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும்பொலிஸ் தலைமையகம் மேற்கொண்டுள்ளது.

இதற்கென பொலிஸ் புலனாய்வுக் குழுக்கள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (எ)

### வாள்வெட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாத குழுவினரால் துரத்தித் துரத்தி வெட்டப்பட்டனர். படுகாயங்களுக்கு இலக்கான இவர்கள் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பாக நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்கவினால் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணைகள் மற்றும் கண்டறிவுகளின் அடிப்படையில் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. (எ)

### அவதூறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாழும் யாழ் மாவட்டத்தில் ஒரு சில நபர்களின் வன்முறைச் செயற்பாட்டினை வைத்துக் கொண்டு யாழ்ப்பாண மக்கள் வன்முறையை நோக்கிச் செல்கிறார்களெனத் தெற்கில் பிரசாரம் முடுக்கிவிடப்பட்டுள்ளது. அவ்வாறான வன்முறைச் செயற்பாடுகள் இளைஞர்களின் விரக்தி நிலையின் விளைவேயொழிய, அவர்களில் ஒரு சிலர் முன்னாள் போராளிகள் என்பதற்காக எல்லா முன்னாள் போராளிகளையும் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதோ, அவர்களைப் புண்படுத்தும் முகமாகக் கருத்துகளை வெளியிடுவதையோ அரசு தவிர்த்துக் கொள்ள வேண்டும். இல்லையேல், இது சும்மா இருப்பவர்களையும் தூண்டும் செயலாகவும் அமைந்துவிடும்.

மூன்று சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர்கள் மீது பாரிய குற்றங்கள் சுமத்தப்பட்டு, ஒருவர் சிறைத் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார், இன்னொருவர் விளக்கமறியலிலிருந்து பிணையில் நிற்கின்றார், மற்றையவர் விளக்கமறியலில் உள்ளார். இவர்களின் செயற்பாட்டிற்காக முழு பொலிஸ் திணைக்களத்திற்கே அவதூறு ஏற்படுத்தும் வகையில் கருத்துகளை வெளியிட முடியுமா?

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு இன்று மூன்று வருடங்கள் ஒன்பது மாதங்கள் ஆகின்றது. இந்த நாற்பத்தைந்து மாத காலத்திற்குள் வடக்கில் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தக் கூடிய முதலீடுகளை வரவழைக்கக் கூடிய எந்தவித வேலைத்திட்டங்களையும் வட மாகாண சபை செய்யவில்லை. மாறாக வரவிருந்த முதலீட்டு வாய்ப்புகளைக் கூடத் தடுத்த அல்லது அசமந்தப் போக்கால் கைநழுவ விட்ட செயற்பாடுகளே நடந்தேறியுள்ளன. அந்த வகையில் முன்னாள் போராளிகள் உள்ளடங்கலாக வட மாகாண இளைஞர்களின் விரக்திக்கு வட மாகாண சபையும் பொறுப்புக் கூறியே ஆக வேண்டும்” - என்றுள்ளது.

### மன்னிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு முறை சமூகமளிக்க முடியாது போனமைக்கு அமைச்சர் முதலில் மன்னிப்பு கோரியுள்ளார். அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொண்டதால், தன்னால் கலந்து கொள்ள முடியாது போனது எனவும் அவர் கூறியுள்ளார். (ஆ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 02.08.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.